# புலிகள் - கருணாநிதி பேச்சு தொடர்கிறது

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகள் ஜனநாயகப் பாதைக்கு வர இருப்பதாகவும், அதற்கான சில முட்டுக்கட்டைகள் இருப்பதாக தம்மிடம் தெரிவித்ததாக தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகி ஆகியோருடன் நேற்று இரண்டாவது நாளாக முதலமைச்சர் பேச்சு நடாத்தினர் இந்த முட்டுக்கட்டைகளின் விபரங்களை விடுதலைப் புலிகள் தம்மிடம் எடுத்துக்கூறியிருப்பதாக தெரிவித்த முதலமைச்சர் அவற்றைப்பற்றி ஏனைய தமிழ்க் குழுக்களுடனும், பிரதமர் வி. பி. சிங்குடனும் தாம் ஆலோசனை நடாத்தவிருப்பதாகவும் குறிப்பிட்டார். விடுதலைப் புலிகளின் ஜனநாயக வழிக்கு வருவதற்கு உரிய சிக்கல்கள் பற்றி தற்போது சொல்வதற்கு எதுவுமேயில்லை எனவும் முதல்வர் சொன்னார். இன்று காலை மீண்டும் விடுதலைப் புலிகளுடன்

— 6-ம் பக்கம் பார்க்க


பக்கங்கள் ஆறு — விலை ரூபா: 3·00

# முரசொலி

முரசு 04 ஒலி 14 ஞாயிறு 18-02-1990 (மாசி 06) றஜபு 21


ஈரோஸ் பாலகுமார் பேட்டி

# தேசிய சக்தியாக விடுதலைப் புலிகள் தனித்தலைமைக்கு வழிவிடுவோம்

[ கொழும்பு ]

தமிழர்களுக்கு எதிராக வருகின்ற அடக்கு முறைக்கு எதிர்ப்புக்கு தற்காப்பு உணர்வின் அடையாளச் சின்னமாக இருப்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவபீடம்: அதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம் தனித்தலைமை உருவாகட்டும் அதற்கு நாங்கள் வழிவிடுகிறோம் இவ்வாறு ஈரோஸ் இயக்கத்தின் பொதுச்செயலர் வே. பாலகுமார் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

தேசிய சக்தியின் முழுமையான வெளிப்பாடாக விடுதலைப்புலிகள் திகழ்கின்றனர், புலிகளுடன் உறவை வலுப்படுத்தவே நாம் விரும்புகிறோம் புலிகள் எமக்கு எந்த அச்சுறுத்தலும் விடவில்லை. எமது எம். பிகள் ராஜினாமா செய்வது என்பது நாங்களாகவே எடுத்த முடிவு எனவும் பாலகுமார் அப்பேட்டியின் போது குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கு மாகாண சபைகலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடைபெற்றால் தேர்தலில் பங்குகொள்வது குறித்து சூழ்நிலைக்கு ஏற்ப முடிவெடுப்போம். இதுவரை கொள்கையளவில் அப்படியேதும் திட்டம் இல்லை. புலிகளுடன் நல்லிணக்கம் ஏற்படுத்தவே நாம் விரும்புகிறோம் என்றார் ஈரோஸ் செயலாளர் பாலகுமார்

## புலிகளிடம் கைதான, சரணடைந்த 191 இளைஞர் மன்னாரில் விடுதலை

(வவுனியா)

மன்னார் மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சரண் அடைந்தவர்களும், புலிகளினால் கைதானவர்களுமான 191 தமிழ்த்தேசியராணுவத்தினைச் சேர்ந்த இளைஞர்கள் கடந்த வெள்ளிக்கிழமை மன்னாரில் வைத்து பெற்றோரிடம் வைபவ ரீதியாக ஒப்படைக்கப்பட்டனர்.

மன்னார் நகரில் உள்ள புலிகளின் காரியாலயம்முன்பு இந்தவிடுவிப்புவைபவம்நடந்தது இந்த வைபவத்தில் பேசிய புலிகளின் மன்னார் தீவுப்பகுதி இராணுவ அரசியல் பொறுப்பாளர் திரு லே. லக்சுமணன் தனது உரையில்:-

மனிதாபிமான முறை

— 6 ஆம் பக்கம் பார்க்க

## வட-கிழக்கு பொலிஸ் ஆட்சேர்ப்பு

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிள் ஆகிய பதவிகளுக்கு ஆட்கள் சேர்க்கப்படவுள்ளார்கள். பாரிய அளவில் இவ் ஆட்சேர்ப்பு நடைபெறவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் அடுத்த வெள்ளிக்கிழமை வெளிவரும் அரச வர்த்தமானியில்வெளியிடப்படவுள்ளது.

இதன் மூலம் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்படுவோர் வடக்கு-கிழக்கு மாகாணங்களின் கீழ் சேவையாற்றுவார்கள்.

தற்போது வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் அதி

—6 ஆம் பக்கம் பார்க்க

## மாத்தயா அம்பாறையில்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் மாத்தயா நேற்று அம்பாறைக்கு சென்றுள்ளதாகத் தெரியவருகிறது. அம்பாறையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயற்பாட்டை ஆரம்பித்து வைப்பதற்காகவே அவர் அம்பாறை சென்றுள்ளார்.

அவர் அங்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கட்சிக் கிளைகளை கிராமங்கள் தோறும் திறந்து வைத்து கட்சியின் செயற்பாட்டை முடுக்கி விடுவார் எனத் தெரிகிறது. அத்துடன் தமது முக்கியமான உறுப்பினர்களுடன் கட்சியின் செயற்பாடுகள், வேலைகள் தொடர்பாகவும்

— 6 ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற ஆசிரியர் பயிலுநர் தேரிவில் லஞ்சம்

கிளிநொச்சி மாவட்ட பயிற்சி ஆசிரிய நியமனம் தொடர்பாக உடன் விசாரணை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் திரு. கே. பி. சண்முகசுவாமி அவசர தந்தி மூலம் ஜனாதிபதி, கல்வி அமைச்சர், மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் செயலாளரும் அமைச்சருமான ரஞ்சன் விஜேயரட்ண ஆகியோரைக் கேட்டுள்ளார். இந்த நியமனத்திற்கு விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்வதில் சிலர் லஞ்சம் பெற்றதுடன் முறைகேடுகளும் நடந்துள்ளன இதனால் இதுபற்றி உடன் விசாரணை மேற்கொள்ளுமாறும் இத்தெரிவை ரத்துச்செய்யுமாறும் இவர் கேட்டுள்ளார்.

## பயிரை மேய்ந்த வேலிகள் 68 பேர் நீதி விசாரணையில்

ஆயுதப்படையைச் சேர்ந்த அதிகாரிகள் உட்பட அறுபத்தெட்டுப்பேர் இராணுவ ஒழுங்கு விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர். கொலை கொள்ளை, கற்பழிப்பு, ஜே. வி. பியுடன் தொடர்பு போன்ற பல்வேறு குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். விரைவில் இவர்கள் நீதிமன்றம் முன்பாக நிறுத்தப்படவுள்ளனர்.

## மட்டு மாநகரவீதி ஒழுங்கு பொலிசாரிடம் ஒப்படைப்பு

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் மட்டக்களப்பு பொலிஸார் வீதி ஒழுங்கு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். அண்மைக்கால வாகன விபத்து சம்பவங்களைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையே நடைபெற்ற சந்

—6 ஆம் பக்கம் பார்க்க

## அதிக பயணிகள் ஏற்றிய வான் புலிகளால் தடுத்துவைப்பு

நேற்று அதிக பயணிகளை ஏற்றிக்கொண்டு கிளிநொச்சியில் இருந்து யாழ். வந்த மினிவான் ஒன்று விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வான் அதன் கூரையிலும் பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் வருகையில் சாவகச்சேரியில் வைத்து விடுதலைப் புலிகளால் தடுக்கப்பட்டது. தற்போது இந்த வான் புலிகளின் யாழ். பிரதான கிளையின்

— 6 ஆம் பக்கம் பார்க்க

## 87 இளைஞர்கள் நேற்று விடுதலை

(பருத்தித்துறை)

இந்தியப் படையினரால் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 87 இளைஞர்கள் நேற்று உடுப்பிட்டி இந்திய அமைதிகாக்கும் படைமுகாமில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினர் முன்னிலையிலேயே இந்த 87 இளைஞர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

— 6 ஆம் பக்கம் பார்க்க

## மேஜர் சோதியாவின் மறைவிற்கு பிரான்ஸ் நாட்டில் அஞ்சலி

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவுத் தலைவி மேஜர் சோதியாவின் (வசந்தி) மறைவுக்கு பிரான்சில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவின் பிரான்ஸ் கிளையினரால் பாரீசில் நடாத்தப்பட்ட 'சுதந்திரகீற்று' கலை நிகழ்ச்சியின் போதே இந்த அஞ்சலியும் இடம்பெற்றது. மட்டக்களப்பில் உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் உருவப்படமும் நிகழ்ச்சியில் வைத்து மலர் அஞ்சலி செய்யப்பட்டது.

'கூர்டிஸ்தான்' விடுதலை

— 6ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச செயலர் கிட்டு

விடுதலைப் புலிகளின் சர்வதேச அலுவலக பொதுச் செயலாளராக யாழ். மாவட்ட முன்னாள் தளபதி திரு. கிட்டு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தற்பொழுது லண்டன் வைத்தியசாலையில் எலக்

6-ம் பக்கம் பார்க்க

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

திருமண அழைப்பிதழ் அச்சடிக்கும் காட்டுகள் பிறந்தநாள் வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்கள் தொகையாகப் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகட்கு விசேஷ கழிவுண்டு. விபரங்கட்கு ஸ்ரீ காந் புத்தகசாலை, 165, மின்சாரநிலைய வீதி, பஸ் நிலையம், முன்புறம், யாழ்ப்பாணம். 02190

### பயிற்சி

பாலராசிரியர்பயிற்சிநெறி 1990க்கு, க. பொ. த. (சா/த) சித்தியடைந்த பெண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நேரில் வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். 02113

### தேவை

யாழ். இந்து வேளாளர் உயர்குலத்தைச் சேர்ந்த பெற்ருேர், 34 வயது நிரம்பிய லண்டனில் வசிக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக B.Sc பட்டதாரியும், CIMA கணக்காளருமாகிய மகனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த உகந்த மணமகளைத் தேடுகின்றனர். CIMA கணக்காளர் அல்லது Stage 2 சித்தியடைந்தவர்கள் மாத்திரம் சாதகம், மற்றும் முழு விபரங்களுடன் தொடர்பு கொள்க. விளம்பர இல. 286, C/o முரசொலி ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 02174

### புத்தகம்

K. டானியலின் புதிய வெளியீடு தண்ணீர் 45/-. குறுநாவல்கள் 45/- விற்பனையாளர்கள் பூபாலசிங்கம்புத்தகசாலை யாழ்ப்பாணம். 02181

### கல்வி

விற்பனையாகிறது! சமூகக் கல்வி ஆண்டு 11 (திருத்திய புதிய பாடத் திட்டம்) ஆக்கியோன் ந. தர்மபாலன் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். 02171


## மின்சாரம் வழங்க நடவடிக்கை

(தாளையடி)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு மின்சாரம் வழங்கும் முகமாக ஆரம்ப வேலைகள் கடந்த ஆண்டு மார்கழி மாதம் தொடக்கம் ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. தூண்கள் நாட்டப்பட்டு மின்கம்பி இணைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. சோறன்பற்றிலிருந்து மருதன் கேணி சந்திவரை சக்தி வாய்ந்த மின்சாரம் வழங்கப்பட்டு மருதன் கேணிச் சந்தியிலிருந்து வடக்குப்பக்கமாக தாளையடிவரையும், கிழக்குப் பக்கமாக மருதன் கேணி வரையும் பாவனையாளருக்கு மின்சாரம் வழங்குவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## மாத்தளையில் 223 பேரைக் காணவில்லை

மாத்தளை மாவட்டத்தில் சுமார் 223 பேர் காணுமல் போயுள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மாத்தளை மாவட்ட உறுப்பினர் திரு. நந்திமித்ர ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். காணுமல் போன இவர்கள் பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

## நற்சான்றிதழ்ப் படிவங்கள்

# கிராம சேவகர்களிடம் இல்லை; வெளியில் தாராளமாக உண்டு

(வண்ணார்பண்ணை)

கிரமசேவை அலுவலர்கள் வழங்கும் வதிவிடச்சான்றிதழ் நற்சான்றிதழ் ஆகியனவற்றுக்குரிய அச்சிட்டபடிவங்களுக்குப்பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதன் காரணமாகக்கிராம சேவை அலுவலர்கள் தங்களிடம் சான்றிதழ் பெறவருவோருக்கு அவற்றை வழங்கமுடியாது. பெரும் சிரமமுறுகின்றனர்.

வெளியிடங்களில் தனியார் அச்சிட்டு விற்பனை செய்யும் படிவங்களைப்பணம் கொடுத்துப்பொதுமக்கள் வாங்கிக் கொண்டு கிராமசேவை அலுவலர்களிடம் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

தற்போது யாழ்- மாவட்டத்தில் பயிலுநர் ஆசிரியர் நேர்முகத்தேர்வுக்குச்செல்வோர் வதிவிடச்சான்றிதழ் கிராமசேவை அலுவலர் வழங்கும் சான்றிதழ் ஆகியவற்றைச்சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டனர். இதன் காரணமாக இப்படிவங்கள் பல்லாயிரக்கணக்கில் வெளியில் விற்பனை செய்யப்படுகின்றன. அரசினுல் இலவசமாக வழங்கப்படவேண்டிய இப்படிவங்களுக்குப் பொதுமக்கள் பணம் கொடுத்து வாங்கவேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது'

## வவுனியாவில் அமைதி குற்றச் செயல்கள் குறைவு

(வவுனியா)

வவுனியாவில் அமைதி நிலவுகின்றது. குற்றச் செயல்கள் குறைந்துவிட்டன என வவுனியா பொலிஸ்நிலைய சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் நகருக்குள் வந்தபிறகு குற்றச்செயல்கள் நூற்றுக்கு நூறுவீதம் குறைந்துவிட்டது எனவும் குறிப்பிட்டார்.

தமது குற்றவியல் பிரிவுக்கு சில காலமாக எந்தவித குற்றவியல் தொடர்பான புகார்களும் கிடைக்கவில்லை, அதனையிட்டு தாம் மகிழ்ச்சி அடைவதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

## மன்னார்ப்பகுதி விவசாயிகளுக்கு து. ம. சங்கம் உதவித்திட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் விவசாய இலாகா, சமநல சேவை நிலையங்கள் போன்றவற்றுடன் இணைந்து, மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் கடந்த காலபோகம் 89 / 90 - ம் ஆண்டில் 1000க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு விதைநெல், உப உணவு விதைகள் போன்றவற்றை வழங்கியுள்ளது.

இருந்தும் கடந்த வருடம் கிடைத்த குறைந்த மழைவீழ்ச்சியினுலும் குறுகிய மாதங்களை நெல் தட்டுப்பாட்டினுலும், இம் மாவட்டத்தில் 40% நெற்செய்கை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது. தைமாதம் முதற் கிழமைகளில் எதிர்பாராமல் கிடைத்த 235 மி. மீக்கு மேற்பட்ட மழைவீழ்ச்சியினுல் சிறு குளங்களில் போதியளவு நீர் காணப்பட்டது. இதைப் பயன்படுத்தித் துயர் துடைப்பு மறுவாழ்வுச் சங்கம் 1990 ஆம் ஆண்டில் இடைப்போகம் செய்வதற்கு விவசாயிகளை ஊக்கப்படுத்தியது.

நிலத்தினதும், நீரினதும் உச்சப்பயனைப் பெறும் பொருட்டு, இச்சங்கம் சகல கமநல சேவை நிலையங்களுக்கும் கிராமிய மட்ட ஸ்தாபனங்களுக்கும் தேவையானஉப உணவு விதைகளையும், மரக்கறி விதைகளையும் இலகு கடன் அடிப்படையில் வழங்கியுள்ளது. இதில் பாசிப்பயறு, கௌபீ, டுபாய்பூசணி. நிலக்கடலை, மரக்கறி விதைகள் போன்றன அடங்கும்.

மன்னார் மாவட்ட விவசாயிகள் தமக்குத் தேவையான விதைப்பொருள்களை இந்நிலயங்களில் பெற்றுக்கொள்ளுமாறு இச்சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். இத்திட்டத்திற்குச்சிறுவர் பாதுகாப்பு நிதியம் நிதியுதவி வழங்கி வருகிறது.

மேலும் இச்சங்கம் 1990-ம் கல்வி ஆண்டில் தாய், தந்தையர் அற்ற பாடசாலை மாணவர்களுக்கும் ஏழைச் சிருர்களுக்கும் பாடசாலை உபகரணங்களையும் சீருடைகளையும் விநியோகிக்க இருக்கின்றது.

## 'காத்தவராயன்' பின்போடப்பட்டது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகர வரியிறுப்பாளர் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் இன்று ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை சிவன்கோவில் கலா மண்டபத்தில் நடாத்தப்பட இருந்த நாடகம் தவிர்க்க முடியாத காரணத்தினுல் பின்போடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை நகர வரியிறுப்பாளர் சங்கம் அறிவித்துள்ளது.


## வாடகைக்கு

பரந்தனில், கண்டி வீதிக்கு அருகாமையில் நல்ல சுற்றுடலிலுள்ள மின்சார, நீர் வசதியுடனுன கல்வீடு ஒன்று உடனடியாக வாடகைக்கு கொடுக்கப்படும். அரசாங்கதிணைக்களங்களின் காரியாலயமாகவும் பாவிக்க உகந்தது.

விபரங்கட்கு: திரு. சசிவராசா
9/1, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

02196


## நன்றி நவிலல்

புலோலி கிழக்கு கணபதிப்பிள்ளை வள்ளிப்பிள்ளை (நல்லபிள்ளை) யின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட வடமராட்சி உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும், யாழ்ப்பாணம் ஆவரங்கால் உருத்திரபுரம், மல்லாவி, கல்விளான், தண்ணீர் ஊற்று உறவினர்; ஒட்டுசுட்டான் இ. ம. கூ. உத்தியோகத்தர், ஊழியர்களுக்கும்; தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிருேம்.

இங்ஙனம்

கணவன், சகோதர சகோதரிமார்,
மருமகள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பிள்ளைகள்
1ம் கட்டை, புலோலி கிழக்கு,
பருத்தித்துறை

க. பத்மநாதன்
இலங்கை
மட்பாண்ட
கூட்டுத்தாபனம்
ஒட்டுசுட்டான்.

02193


சாவகச்சேரி

## மிட்லண்ட் வீடியோ ஸ்தாபனத்தார்

மிகவும் தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகள் குறைந்த கட்டணத்தில் செய்து கொடுக்கின்றனர்.

### திறந்திருக்கும் நேரம்

காலை. 8.00 மணி தொடக்கம்,
மாலை. 8.00 மணிவரை

CANON PHOTO COPY

02108


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுகிருத்திய அழைப்பிதழும் நன்றி நவிலலும்



### திரு. மயில்வாகனம் பொன்னையா

(இளைப்பாறிய ஆசிரியரும், ஆயுர்வேத வைத்தியரும்)

சரசாலையில் தோற்றம்: 27 - 04 - 1915
நாவற்குழியில் மறைவு: 20 - 01 - 1990

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எம்மவரையெல்லாம் ஏற்றமுறச் செய்து குடும்பத்தின் ஒளிவிளக்காய் எமக்கெல்லாம் நல்வழி காட்டி உழைப்பின் சிகரமாய் வாழ்ந்து எம்மையெல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரே! நீங்கள் மறைந்து 31 நாட்கள் சென்ருலும் இன்றும் எம் கண்கள் முன்னே நடமாடும் தெய்வமாகக் காட்சி தருகின்றீர்கள்.

1990-02-19-ம் தேதி திங்கட்கிழமை அன்னரின் இல்லத்தில் நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்தியத்தில் கலந்து அன்னரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

1990-01-20-ம் திகதி பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் அன்னரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர்க்கும், ஆறுதல் கூறியவர்கட்கும், பல்வேறு விதத்தில் உதவிகள் புரிந்தவர்கட்கும் எமது உளம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

பிரிவால் துயருறும்

ஸ்ரீமுருகன் வைத்தியசாலை, நாவற்குழி, கைதடி.
பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

02194

# பட்டபின்... சுட்டபின்... கேட்டபின்...

இளைஞர் அமைதியின்மை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் சிபார்சுகளை ஆராயும் முகமாகக் கடந்த புதன்கிழமை சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது.

சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி ஆணைக்குழு ஐம்பத்தொரு விடயங்களை விதந்துரைத்துள்ளது. அவற்றில் நாற்பத்திநான்கு சிபார்சுகளைத் தான் அமுல்படுத்துவதாக ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ மாநாட்டிற்குத் தலைமை தாங்குகையில் குறிப்பிட்டார்.

இவற்றில் சிலவற்றைத் தாம் விரைவில் நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் குறிப்பிட்டார் ஜனாதிபதி.

அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்குதல், அரசிடம் சரணடைபவர்களைப் பாதுகாத்தல், சட்ட விரோத இராணுவங்களை நீக்குதல், பதவி வெற்றிடங்கட்கு அரசியல் தலையீடற்ற தகுதி அடிப்படையிலான நியமனம், அரசியல்வாதிகளின் ஒழுக்க நடைமுறைகள், கட்சித் தாவலைத் தடைசெய்தல், பத்திரிகைகளுக்குச் சுதந்திரம் வழங்குதல், அதற்கான வெகுஜனத் தொடர்பு ஆணைக்குழு ஒன்றை நிறுவுதல்.

அத்துடன் மொழிப்பாகுபாட்டை நீக்கி மூன்றாம் வகுப்பில் இருந்து ஆங்கிலம் போதித்தலும், முதலாம் வகுப்பு முதல் தமிழ் மாணவருக்குச் சிங்களமும், சிங்கள மாணவருக்குத் தமிழும் போதித்தல் ஆகியவற்றை அரசாங்கம் உடனடியாக அமுல்படுத்த உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இலங்கையைத் தமது தாயகமாகக் கொண்ட சகல மக்களும் சமமாக நடத்தப்படுவதற்கும், சமவாய்ப்புக்கள் பெறுவதற்கும் உரித்துடையவர்கள் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி அச்சுறுத்தல், இராணுவ நடவடிக்கைகளால் எந்தப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

காலத்திற்குக் காலம் மேலெழுந்து வரும் பிரச்சினைகளைத் தீர்க்க அவ்வப்போது மாநாடுகள் கூட்டப்படுவது வழக்கம். அந்த வழக்கத்தின் தொடர்ச்சியே இந்த மாநாடு.

இலங்கையின் இனப்பிரச்சினை தலைதூக்கி இன ஒடுக்குமுறை உச்சக்கட்டத்தை அடைந்தது. அரசுக்கெதிராக எழுந்த போராட்டத்தினைத் தணியவைக்க இதே யு.என்.பி. அரசு முன்னைய ஜனாதிபதி தலைமையில் ஒரு சர்வகட்சி மாநாட்டினை 84 இல் கூட்டியது. அந்த மாநாடும் அதன் தீர்மானங்களும் காலத்தோடு அள்ளுப்பட்டுப் போய்விட்டன.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மாநாடும், பேச்சுக்களும் தொடர்ந்து கூட்டப்பட்டு, பேசப்பட்டு வந்தன. இன ஒடுக்குமுறை தொடரப்பட்டபடியே.

எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வெறும் தீர்மானங்களாகவே இருந்தன நடைமுறைப்படுத்தப்படாமல். தமிழ் மக்கள் மீது தொடுக்கப்பட்ட யுத்தம் தொடர்ந்து கொண்டேயிருந்தது நிறுத்தப்படாமல்.

விளைவு, இந்தியப்படை வந்தது. பிறகு ஜனாதிபதியும் மாறியாயிற்று மாகாணசபையும் வந்தது. பிரச்சினை மட்டும் தொடர்ந்தபடியே

மீண்டும் புதிய ஜனாதிபதி தலைமையில் சர்வகட்சி மாநாடு. தீர்மானங்கள் நடைமுறைப்படுத்துவது பற்றிப் பேச்சு?

இங்கே நாம் எமது இளைஞர்களின் விரக்தி நிலை தொடர்பாகச் சில அடிப்படைகளை விளங்கிக் கொள்வது அவசியம்.

சிங்கள, பௌத்தமதத் தீவிரவாதத்துடன் எமது பிரச்சினை ஆரம்பமாகியது. தொடர்ச்சியாக சிங்களம் மட்டும் சட்டம், உயர்கல்வி தரப்படுத்தல், வேலைவாய்ப்புகள் அற்ற நிலை எமது பிரச்சினையைக் கூர்மையடையச் செய்தது.

ஆட்சிக்கு வந்த இரண்டு அரசுகளும் தமது ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்வதற்காக சிங்கள மக்களது மொழி, மத, உணர்வுகளைப் பயன்படுத்தினர். தமிழ் மக்களுக்கெதிராக அவர்களைத் திசை திருப்பி விட்டனர். அதன் விளைவுதான் கடந்த ஒரு தசாப்தம்.

எனவே தமிழ் மக்களது, தமிழ் இளைஞர்களது பிரச்சினைக்குத் தீர்வினை இந்த சர்வகட்சி மாநாட்டின் முடிவுகள் தருமா என்பது கேள்விக் குறியே.

தமிழ் மக்களுக்கான சுய நிர்ணய உரிமை ஒன்றுதான் தமிழ் இளைஞர்களின் விரக்திகளைத் தீர்க்க ஒரே வழியாகும்.

## இதயநாதம்

ஞாயிற்றுக்கிழமை 18 - 02 - 1990

செய்யும் செயல் வேறாகவும், சொல்லும் சொல் வேறாகவும் உள்ளவரின் நட்பு, ஒருவனுக்குக் கனவிலும் துன்பம் தருவதாகும்.

- குறள்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# வடபகுதி இளைஞர்கள் கொழும்பில் இயக்கப் போர்வையில் மிரட்டல்

## கொழும்பு றவுண்ட் அப்

### இரண்டாம் பகுதி

கொழும்பு நகர வீதிகளில் எங்கும் பார்த்தாலும் தமிழக் குரலைக் கேட்கமுடியும். 1983 ஜூலை கலவரத்திற்குப் பின்னர் தமிழர்கள் சுதந்திரமாக தமிழ் பேசி நடமாடுவதை இப்போது தான் காண முடிகிறது.

எங்கெங்கு தமிழ் பேசமுடியாத நிலைமை இருந்ததோ அங்கெல்லாம் தமிழ் மணம் கமழுகிறது. கொழும்பு காலிமுகத்திடலுக்குச் சென்றால் யாழ்ப்பாணத் தமிழ் இளைஞர்களினதும் யுவதிகளினதும் நடமாட்டத்தை மட்டுமல்ல வயது முதிர்ந்த வயோதிபத் தம்பதிகளினதும் நடமாட்டங்களைப் பார்க்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

காலிமுகத்திடலுக்கு வரும் பெரும்பான்மைச் சமூக இளஞ்சோடிகளை சுதந்திரமாக இவர்கள் உலவ விடமாட்டார்கள். ஏதோ காணாத பொருளைப் புதிதாகப் பார்ப்பதுபோல...இல்லை... இறைச்சித்துண்டை நாய் பார்ப்பது போலப் பார்ப்பார்கள்.

பெரும்பான்மைச் சமூகப் பெண்கள் சுதந்திரமாகக் காலிமுகத்திடலில் உலவ முடியாது. அவர்களுடன் சேட்டை விடுவது தமிழ் இளைஞர்களின் தொழிலாகிவிட்டது. பெரும்பான்மைச் சமூகப் பெண்கள் என நினைத்துக் கொழும்புத் தமிழ்ப் பெண்களுடன் சேட்டை புரிந்த இளைஞர்கள் சில தினங்களுக்கு முன்னர் அப்பெண்களாலேயே நையப் புடைக்கப்பட்ட சம்பவம் இடம் பெற்றது.

இக் கண் கொள்ளாக் காட்சியைக் காலிமுகத்திடலுக்கு வந்த பலர் இலவசமாகக் கண்டு களித்தனர் இக்காட்சியைக் கண்டு வேதனையடைந்த ஒரு முதியவர் ''வெளிநாடுகளில்தான் தமிழர்களின் மானம் காற்றில் பறக்கிறது என்றால் கொழும்பிலும் காற்றில் பறக்க விடுகிறார்களே' என்று வெம்பினார்.

தமிழர்களின் பண்பாடுகளை கிராமப்புற தூய்மையான பண்பாடுகளைக். கொழும்பு நகரில் எம் தமிழ் இளைஞர்கள் விலை பேசுகின்றார்கள்... இந்த நிலை எமக்கு ஏற்படத்தான் வேண்டுமா?

கொட்டாஞ்சேனையில் இருந்து வெள்ளவத்தை செல்லும் பஸ்களில் நம் இளைஞர்கள் ஏறிவிட்டால் அவர்களுக்குப் பக்கத்தில் பெண்கள் நின்று விட்டால் சொல்லத் தேவையில்லை. அவர்களின் அடாவடித் தனங்களுக்கு முடிவே இருக்காது.

கொழும்பு வாழ் நண்பர் ஒருவர் கருத்து வெளியிடுகையில் நான் வீட்டுக்குப் போகும் போது யாழ்ப்பாணத்து இளைஞர்கள் பஸ்சில் இருந்தால் அவர்களுக்கு அருகில் செல்வதில்லை. தூர நின்று விடுவேன் என்றார்... ஏன் என்று கேட்டதற்கு அவர்களுக்கு விழுகின்ற அடி உதைகளில் எனக்கும் பங்கு கிடைத்து விடும் என்று நாசூக்காக சொல்லி முடித்தார்.

கொட்டாஞ்சேனை, பம்ப

### உதரன்

லப்பிட்டி, வெள்ளவத்தை போன்ற இடங்களில் வாழ்கின்ற அல்லது அவ் வழியால் போகின்ற சிங்களப் பெண்கள் இப்போது தனிமையில் நடமாடப் பயப்பிடுகின்ற அளவுக்கு யாழ்ப்பாணத்து இளைஞர்களின் அட்டகாசங்கள் அதிகரித்து விட்டன. கொழும்பில் உள்ள சேட்டைக்கும் தொழிற்சாலை, பிளாஸ்டிக் தொழிற்சாலை, பக்கிங் தொழிற்சாலை போன்றவற்றில் வேலை செய்யும் பெண்கள் தொழிற்சாலை வேலை முடிந்து நிம்மதியாக வீடு செல்ல நம் இளைஞர்கள் விடுவதில்லை. அவர்களுடன் அங்க சேட்டை புரிகின்றனர்.

அவர்களை பஸ்நிலையம் வரை அழைத்துச் சென்று பஸ் ஏற்றி விடும் பாதுகாவலர்களாகவும் கடமை புரிகின்றனர். இவர்களுக்கு எவ்வளவு தாராள மனது பார்த்தீர்களா? விளக்கமாகச் சொன்னால் வேலைக்குப் போகும் பெண்களுக்கு பாதுகாப்பே நம் தமிழ் இளைஞர்கள்தான்.

இவர்களது சேவை மனப்பான்மையின் நோக்கத்தைப் புரிந்த பொலிசார் தொழிற்சாலை வேலை முடிவடையும் நேரங்களில் பொலிஸ் ஜீப்பில் ரோந்து சுற்றி வருவதனையும் காணமுடிகிறது.

கொழும்புவாசி ஒருவர் என்னுடன் உரையாடுகையில் தமது ஊரைவிட்டுப்பிற ஊர்களில் வந்து தங்கும்போது கட்டுப்பாடாக நடந்து கொள்ள வேண்டும். ஊரின் பெருமையைக் காப்பாற்ற வேண்டும். இவர்களின் இப்படியான நடவடிக்கைகளைப் பார்க்கும் போது இவர்கள் மனிதர்கள் தானா?.... இவர்கள் சகோதரிகளுடன் பிறக்கவில்லையா? என்ற வினாக்களே மனதில் எழுகின்றன என்று வேதனையுடன் கூறினார்.

மாலை ஆறு மணி என்றால் யாழ் இளைஞர்கள் எல்லோரும் கொழும்பு வீதிகளில் வலம் வரத் தொடங்கிவிடுவார்கள். ஆங்காங்கே கூடி கும்மாளம் அடிப்பார்கள். வெள்ளி, செவ்வாய் ஆகிய நாட்களில் இந்து கிறிஸ்தவ ஆலயங்களில் இவர்களின் நடமாட்டத்தைக் காணமுடியும். இந்து ஆலயங்களில் பழைய செருப்புக்களை கழற்றி விட்டுப் புதிய செருப்புக்களை எடுத்துச் செல்லும் நாகரிகமான வேலைகளையும் கச்சிதமாக முடித்து விடுவார்கள்

இப்போது கோவிலுக்குப் போவோர் மறக்காமல் செருப்புப் பாதுகாப்பு இடங்களில் வைத்துவிட்டுத் தான் செல்கிறார்கள். கொழும்பு வாழ் மக்களுக்கு தற்சமயம் யாழ். தமிழ் இளைஞர்கள் நடவடிக்கைகளால் வெறுப்பு ஏற்பட்டு விட்டது.

தமிழ் இளைஞர்கள் மீது இருந்த அனுதாபம் இவர்களின் அடாவடித் தனங்களான் வெறுப்பாக மாறி விட்டது. எம் இளைஞர்களின் அடாவடித் தனங்களைப் பார்க்கும் எந்த ஒருவருக்கும் இவர்கள் மீது ஆத்திரம் வரத்தான் செய்யும் இது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

இது தவிர யாழ். இளைஞர்கள் ஹோட்டல்களில் தங்கியிருக்கும் இளைஞர்களைமிரட்டிப் பணம் பறிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருவதனையும் காணமுடிகிறது.

தமிழ் இயக்கங்களின் பெயரைச்சொல்லி மிரட்டும் செயல்களிலும் தமிழ் இளைஞர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஓர் இயக்கத்திற்கு சார்பானவர் மாற்று இயக்கத்திற்கு சார்பானவர்களை மிரட்டிப்பணம் பறித்து வருகின்றனர். மிரட்டலில் ஈடுபடுபவர்கள் இயக்கத்தோடு தொடர்புடையவர்கள் அல்ல. பணத்தைப் பறிப்பதற்காகத்தாம் இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் என்று கூறி வருகின்றனர்.

—4ஆம் பக்கம் பார்க்க

### படிப்பெல்லாம் போச்சு வெளிநாடு என்பதே பேச்சு

கொழும்பில் தங்கி இருக்கும் தமிழ் இளைஞர்களின் வாயில் இருந்து வெளிவரும் பேச்சு வெளிநாடு பற்றியதாகவே இருக்கிறது. எங்கு நின்று எவருடன் கதைத்தாலும் இதுபற்றிய பேச்சே தொடர்கின்றது. யாழ்ப்பாணம் என்றால் படிப்பு அவர்களின் சொத்து என்டார்கள். இப்போது யாழ்ப்பாணம் என்றால் வெளிநாடுதான் என்று சொல்லுகின்ற அளவுக்கு நிலைமை மோசமாகி விடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. நம் தமிழ் இளைஞர்கள் படிப்பில இப்போது ஆர்வம் காட்டுவதில்லை. அதற்குப் பதிலாக பெண்கள் படிப்பில் அதிதீவிர ஆர்வத்தைக் காட்டிவருவதனைக் காணமுடிகின்றது. அசப்பை கணவன் கையில் மாறினாலும் வியப்படைவதற்கில்லை.

### இவர்கள் படிக்கும் புத்தகங்கள்

தமிழ் இளைஞர்களின் கைகளில் கதைப்புத்தகம் இருப்பதைக் கண்டால் சிறுவர்களுக்கு முன்னால் வாங்கிப் புரட்டிப் பார்த்து விடாதீர்கள். ஹோட்டல்களில் தங்கியிருக்கின்ற பலரது கைகளில் இப்புத்தங்கள் இருக்கும். அப்புத்தகங்கள் வயது வந்தவர்கள் வாசிக்கும் புத்தகங்களாகும். இந்தியாவில் இருந்து வரும் 'விருந்து' 'பருவ காலம்' போன்ற புத்தகங்களுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. மிகவும் ஆபாசமான படங்களும் கதைகளும் அப்புத்தகங்களில் அடங்கியிருக்கின்றன. இப்படியான புத்தகங்களைக் கண்டால் நம் இளைஞர்கள் விட்டு வைப்பார்களா? தேடிவாங்குகிறார்கள்.

## முரசொலிக்கு வந்த கடிதம்

# இருளில் மூழ்கும் பஸ்நிலையம்

ஆசிரியர்
முரசொலி
ஐயா,

அண்மைக்கால அசம்பாவிதங்களைத் தொடர்ந்து, யாழ் பஸ் நிலையத்தின் மின் குமிழ்கள் பழுதடைந்து, இருளில் மூழ்கியுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பஸ் நிலைய அதிகாரிகள் தொடர்பு கொண்டபோதும் இதுவரையில் எந்தவொரு பயனும் ஏற்படவில்லை. தற்போது அதிகாலையில் பஸ் நிலையத்திற்கு வரும் பயணிகள் இருளடைந்த சூழ்நிலையில் பஸ் பெயர் பலகைகளைப் பார்க்க முடியாத நிலையில் உள்ளனர். இனியாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் விடயத்தினைக் கவனத்தில் கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

இருபாலை ரஞ்சன்.

# 'நாயகன்' திரைப்படம் இங்கு திரையிடப்படாதது ஏன்?

ஆசிரியர்,
முரசொலி,
ஐயா,

1988-ம் ஆண்டில் இரண்டு ஜனாதிபதி பரிசுகளைப் பெற்ற அனைவரதும் பாராட்டுகளுக்கும் உரித்தான மணிரத்தினத்தின் சிறந்த படைப்பாகிய 'நாயகன்' திரைப்படம் கொழும்பில் திரையிடப்பட்டு பல வாரங்களாகியும் யாழ். நகருக்கு இன்னும் விநியோகிக்கப் படவில்லை. யாழ் நகருக்கு வழங்கப் படவிருந்த இத் திரைப் படத்தின் பிரதி புத்தளம் 'அசோகா' சினிமாவிற்கு வழங்கப் பட்டுள்ளது. இத்திரைப்படம் யாழ். நகரில் திரையிடப்படுவதை அதிகாரிகள் விரும்பவில்லையென நம்பகமான வட்டாரங்கள் தெரிவித்தன. இத்திரைபடத்தில், மக்களோடு ஒன்றிப் போன தலைவர் ஒருவரை பொலிஸார் கைது செய்ய முயற்சி செய்கையில் மக்கள் புரட்சி வெடிப்பதாகக்காட்டப் படுகிறது. இந்தியாவில் பரபரப்பாக ஓடிய இந்த அரிய திரைப்படத்தைத் தமிழ் மக்கள் குறிப்பாக வடக்கு கிழக்கு வாழ் தமிழர் பார்க்க விடாது தடுப்பது வருந்தக் கூடிய விடயமாகும். கமலஹாசனின் நடிப்புத்திறமை முழுவதும் 'நாயகனில்' காட்டப் படுகிறது என்பதுவும் குறிப்பிடத்தக்கது இத்திரைப்படம் யாழ். நகரில் திரையிடப் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

15/2 வைமன் வீதி
யாழ்பாணம். எம்.ஏ. சூசைதாசன்

## புதிய நிர்வாகிகள்

பண்டத்தரிப்பு செபமாதா சனசமூகநிலைய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது விபரம் வருமாறு.

தலைவர்: ஏ ஈ. பீரிஸ், செயலாளர்: ஏ. ஜெறிஸ், பொருளாளர்: எம். ஸ்ரனிஸ்ரேஸ், உப தலைவர்: கொக்கின்ஸ், உபசெயலாளர்: ஏ. சி. ஜயந்தன், நிலையப் பொறுப்பாளர்: எம் .ஜே ஜெனிஸ், விளையாட்டுப் பொறுப்பாளர்கள்: ஏ. அன்ரன், ஏ பி.பிறேமராஜன், கலை கலாசாரப் பொறுப்பாளர்: எம். எட்மன்லொயிட் இவர்களுடன் நிர்வாக உறுப்பினர்களாக; ஜே. றெஸ்லி, ஜி.ஜெறஸ்ரீன்,ஏ நியூமன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

VICKNA TUITION CENTRE

52, Stanley Road Jaffna.
Regd No 12141

A/L (கலை, வர்த்தகம்)
O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த
ஒரே நிறுவனம்
A/L கலை வர்த்தக வகுப்புக்கள்
மீட்டல் (Paper Classes)
DAY CLASSES (7.15 a.m.)
ஆரம்பம் 19 - 2 - 90
சனி ஞாயிறு வகுப்புக்கள் 8 a.m.
ஆரம்பம் 18 - 2 - 90

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்குழு:

| | |
|---|---|
| பொருளியல்: | திரு. கலாகரன் |
| வர்த்தகம்: | திரு இலங்கா |
| கணக்கியல்: | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல்: | திரு. சுப்பிரமணியம் |
| இந்து நாகரிகம் ) இந்துசமயம் ) | திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ்: | திரு. குழந்தை |
| புவியியல்: | திரு. குணராஜா |
| வரலாறு ) அரசியல் ) | திரு. மஃறூப் |

மு. குறிப்பு:
வினு விடை வகுப்புக்கள் முழுவதும் இலவசமாக நடாத்தப்படும். மாணவர்கள் முன் கூட்டியே அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். 02097

# பல்கலைக்கழகத்தில் வரலாற்று ஆய்வு

கல்விசார் கருத்தரங்குத் தொடரில் எதிர்வரும் புதன் கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு யாழ் பல்கலைக்கழக பொருளியல் துறை விரிவுரை மண்டபத்தில் கருத்தரங்கொன்று இடம்பெறவுள்ளது.

கல்விசார் ஆய்வு அரங்கினுல் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கருத்தரங்கில் "பூநகரிப் பிராந்தியத் தொல்லியல் மேலாய்வில் கிடைத்த தொல் பொருள் சின்னங்கள்- ஒரு வரலாற்று ஆய்வு" எனும் பொருள் பற்றி திரு ப. புஷ்பரத்தினம் (விரிவுரையாளர் வரலாற்றுத் துறை) அவர்களின் ஆய்வுக் கட்டுரை வாசிக்கப்படவுள்ளது.

கருத்தரங்கிற்கு வரலாற்றுத்துறையின் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் தலைமை தாங்குவார். அனைவரையும் இதில் கலந்துகொண்டு பயனடையுமாறு கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் கேட்டுள்ளார்.

# சேவையை நீடிக்க கோரிக்கை

[மூளியான்]

பருத்தித் துறையிலிருந்து நண்பகல் நடாத்தப்படும் தாழையடி டஸ்சேவையை ஆழியவளை வரை நீடிக்கும்படி வடமராட்சி கிழக்குப் பகுதியில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் கூட்டாகப் பருத்திதுறை சாலை அத்தியட்சருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். முன்னர் ஆழியவளை வரை நடாத்தப்பட்டுவந்த இச்சேவை அண்மைக்காலமாக தாழையடி வரையுமே நடாத்தப்பட்டுவருகின்றது. இதன் காரணமாக வடமராட்சி கிழக்குபகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஆசிரியர்கள் பலர் தங்களின் சொந்த இடங்களுக்குச் செல்வதில் பல கஷ்டங்களுக்கு உள்ளாகின்றனர்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வடபகுதி...

சில அரசாங்க அலுவல்களில் வேலைசெய்யும் வாலிபர்கள்கூட தாம் இயக்கத்தைச்சேர்ந்தவர்கள் எனக் கூறி மேலதிகாரிகளை மிரட்டுகின்றனராம். அண்மையில் வடபகுதியில் இருந்து மாற்றலாகி வந்த ஓர் ஆசிரியர் அப்பாடசாலையின் அதிபரை நான் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவன் தெரியுமா என்று மிரட்டிய சம்பவம் நிகழ்ந்து இருக்கிறது. அந்த அதிபரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்தான். அந்த அதிபரே இவரின் மிரட்டலுக்குத் தடுமாறி விட்டாராம். இவர் இயக்கத்துடன் தொடர்பு வைத்திருக்கின்றார் என்பதால் ஏனைய ஆசிரியர்கள் இவருடன் தேவையற்ற கதைகள் எதுவும் கதைப்பதில்லையாம்...

நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டிய ஆசிரியரே இப்படி நடந்து கொள்ளும் போது வாலிபர்களை எப்படிக் குற்றம் சுமத்துவது என்று... எமது இனம் பலஇன்னல்களை அனுபவித்து வருகின்றது. எமது பாரம்பரியக் கலாசாரங்களைச்சிலர் திட்டமிட்டுச் சிதைத்து வருகின்றார்கள். எங்கள் கலாசாரத்துக்குள் மேலைத்தேயக் கலாசாரம் புகுந்துகொண்டு வருகிறது. எமதுஇளையதலைமுறை மேலைத்தேயக்கலாசாரத்தைபின்பற்ற முனைந்து திசைமாறிச்சென்று கொண்டிருக்கின்றது. இந்த அபாயத்தில் இருந்து எம் இனத்தைக்காப்பாற்ற நாம் ஒவ்வொருவரும் முன்வரவில்லையானுல் எமது பெருமைமிக்க பாரம்பரியம் ஒழுக்கப் பண்புகளை இழந்தவர்களாவோம்.

## சுவையான செய்திகள்

# முதல்தடவைதோல்வியுற்றதால் சாதனையாளராகிருர் இவர்!

பஞ்சாப்மாநிலத்தில் பில்லாவரி லோக்சபாத்தொகுதியில் போட்டியிட்டவர் சௌத்ரி சுந்தர்சிங். இவர் சுதந்திரம் கிடைக்கும் முன்பே 1946 இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றவர். அதன் பின் நடந்த ஆறு சட்ட மன்றத் தேர்தல்களிலும் தொடர்ந்து 1977 வரை வெற்றி பெற்றுவந்தார். பின்னர் 84-ம், ஆண்டு 88-ம் ஆண்டுகளில் நடைபெற்ற லோக்சபா தோதல்களிலும் போட்டியிட்டு வெற்றி பெற்ருர். எண்பத்து நான்கு வயதான சௌத்ரி இந்தமுறை நடைபெற்ற தேர்தலில் தோற்றுவிட்டார். அதுவும் மூன்ருவது இடத்திற்குத் தள்ளப்பட்டு விட்டார். கடந்த ஐம்பது ஆண்டுகளில் சௌத்ரி சந்தித்த முதல் தோல்வி இது.

# 'ஸ்ரீராம் காபிபார்' இதன் தூயதமிழ் வார்த்தை எது?

தமிழகத் தொழிலாளர் நல இலாகா அண்மையில் தமிழ் நாட்டிலுள்ள கடைகள், வியாபார நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளிலுள்ள பெயர்களைத் தூய தமிழில் எழுதி வைக்க வேண்டும் என்று ஓர் உத்தரவு பிறப்பித்துள்ளது. அதாவது கடைகளின் பெயர்கள் ஆங்கிலம் அல்லது தமிழ் தவிர வேறு ஏதாவது ஒரு மொழியில் இருந்தால் அந்தப் பெயருடன் அதன் அர்த்தத்தை அப்படியே தூய தமிழிலும் எழுத வேண்டும். உதாரணமாக 'ஸ்ரீராம் காபிபார்' என்று தமிழில் எழுதினுலும் அதன் தூய தமிழ் வார்த்தையை 'அருள்மிகு ராமர் குழம்பியகம்' என்று எழுத வேண்டும். வேற்றுமொழிப் பெயரில் பிரபலமடைந்துள்ள பல வியாபார நிறுவனங்கள் தங்களின் புதிய தூய தமிழில் பெயரை மக்கள் மனதில் பதிய வைக்கத் திணறப் போகின்றன. செந்தமிழ் வாழ்க!

# பாடசாலை மதிய உணவு ஏப்ரல் மாதம்முதல் மாற்றம்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் பாடசாலைகளில் மதிய உணவில் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளது.

தற்போது வழங்கப்பட்டு வரும் பணிஸ் மற்றும் பிஸ்கட்டுகளுக்குப் பதில் சௌப்பி, பச்சைபயறு, கிழக்குவகைகள் மற்றும் மரக்கறி வகைகளே இனிமேல் வழங்கப்படவுள்ளது.

இதன்மூலம் உள்ளூர் விவசாயிகள் பயன் அடைவார்கள் எனவும் பெருமளவு பணத்தை மீதப்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

மதிய உணவிற்காக நாளொன்றுக்கு அரசாங்கம் பத்துமில்லியன் ரூபாய்களைச் செலவிடுவதும் குறிப்பிடத்தக்கது

### சண்டிலிப்பாய் பிரிவில்

# சேவண சரண திட்டத்தின்கீழ் 45 வீடுகள் கட்டப்பட்டன

(சங்கானை)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் "செவண சரண" திட்டத்தின்கீழ் கடந்த 1989-ம் ஆண்டில் கட்டத் திட்டமிடப்பட்டிருந்த 87 வீடுகளில் 45 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் முதலாம் கட்டப் பணமான இரண்டாயிரம் ரூபாவைப் பெற்றுக்கொண்டு இதுவரை வீடமைக்க எந்த ஒரு ஆரம்ப வேலைகளையும் ஆரம்பிக்காத 15 பேருக்கு இறுதி அறிவித்தற் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், வேலைகளை ஆரம்பிக்காத பட்சத்தில் வழங்கப்பட்ட முதல் கட்டப்பணம் இரண்டாயிரம் ரூபா திருப்பிப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப் படுமென்றும் இதில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாகவும் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வீடமைப்பு தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. க. தெய்வேந்திரம் தெரிவித்தார்.

### வலிகாமம் மேற்கில்

# சட்டவிரோத ஒளிபரப்பு மாணவர் கல்வி பாதிப்பு

(சங்கானை)

வலிகாமம் மேற்குப் பகுதியில் சில தனிப்பட்டவர்கள் தொலைக்காட்சி மூலம் திரைப்படங்களை ஒளிபரப்புச்செய்வதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

தினமும் இரவு வேளைகளில் இந்த ஒளிபரப்பு இடம் பெறுவதால் வீட்டில் பாடங்களைப் படிக்கும் மாணவர்கள் அதில் நாட்டமில்லாது தொலைக்காட்சியில் திரைப்படங்களைப் பார்ப்பதில்தான் கவனம் செலுத்துவதாகப் பெற்ரேர் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தணிக்கை செய்யப்படாத பல காட்சிகளும், ஆபாசக்காட்சிகளும் இத் திரைப்படங்களில் இடம்பெறுவதால் "இளசுகள்" மனதில் சலனங்களை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

# விளையாட்டு மைதானம்

## மரதன் ஓட்டப்போட்டி முடிவுகள்

நாவற்குழி மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப்போட்டியை முன்னிட்டு 16ம்திகதி காலை 10 கி.மீ தூரம் வரையான மரதன் ஓட்டப்போட்டி இடம் பெற்றது.

115 மாணவர்கள் பங்கு கொண்ட இப்போட்டியில் செல்வன் வரதராஜன் (சுந்தர் இல்லம்) முதலாம் இடத்தையும், செல்வன் நா. சிவகுமாரன் (கப்பர் இல்லம்) இரண்டாம் இடத்தையும், செல்வன் சி. பேரின்பநாதன் (சம்பந்தர் இல்லம்) மூன்றும் இடத்தையும் பெற்றனர். 115 மாணவர்களும் மரதன் ஓட்டத்தை ஓடி முடித்தமை குறிப்பிடத்தக்கது.

## பரு. ஹாட்லிக் கல்லூரியில் உதைபந்தாட்டப் போட்டி

(வடமராட்சி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 150-வது ஆண்டு நிறைவையொட்டி பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடாத்திய உதைபந்தாட்ட இறுதிப் போட்டி அண்மையில் நடைபெற்றது. ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மேற்படி இறுதிப் போட்டியில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் வல்வை விளையாட்டுக் சழகமும் மோதியது. வல்வை விளையாட்டுக் கழகம் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இவ் உதைபந்தாட்டப் போட்டிக்கு நடுவராகத் திரு குலராஜேந்திரம் கடமைபுரிந்தார்.


### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### கூறுவிலை கோரல்

யாழ். மாநகரசபை மின் தூண்கள் தயாரிக்கும் இடமான பாஷையூரில் இருந்து யாழ் மாநகராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட வேலைத்தளங்களுக்கு 25', 28', 30' நீளமுள்ள மீன்சாரத்தூண்களைச் சேதம் எதுவுமின்றி வண்டியில் ஏற்றிப் பறிப்பதற்கு 1990 ஆம் ஆண்டிற்கான கூறுவிலைகள் எதிர்வரும் 02. 3. 90 ம்திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை என்னல் ஏற்றுக் கொள்ளப்படும். கூறுவிலைகள் கம்பம் ஒன்று ஏற்றிப்பறிப்பதற்கு எவ்வளவு என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மின் தூண் ஏற்றிப்பறிப்பதற்கான கூறுவிலை'' என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
16. 02. 90

வே.பெ,பாலசிங்கம்
மாநகரஆணையாளர்
யாழ்ப்பாணம்
02198



### விக்னு
### டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
Regd No: 12141

### O/L Week End Classes

சனி, ஞாயிறு வகுப்புக்கள்
தூர இடத்து மாணவர்கள் நலன் கருதி இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பம்: 18 . 2 . 1990

விஞ்ஞானம்— 8.00 - 9.00 சமயம்— 11.00 - 12.00
கணிதம்— 9.00 - 10.00 சமூகக்கல்வி— 12.00 - 1.00
தமிழ்— 10.00-11.00 ஆங்கிலம்— 1.00 - 2.00

O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த எங்கள் ஆசிரியர் குழு

கணிதம்: திரு. செல்வா
விஞ்ஞானம்; திரு. J. R. சூரி
தமிழ் )
சமயம் ) திரு. சுந்தரலிங்கம்
ஆங்கிலம்: திரு. விஸ்வநாதன்
சமூகக்கல்வி திரு. கருணாகரன்
வர்த்தகம் திரு. கோபி

முக்கியகுறிப்பு:-

கடமை கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்

விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

02089


சிங்கப்பூர் பிரதமர் வேண்டுகோள்

# கம்பூச்சிய பிரச்சினையை தீர்க்க சோவியத் முன்வர வேண்டும்

கம்பூச்சியப் பிரச்சனைக்குச் சமாதானத் தீர்வொன்றைக் காண வியட்நாமை இணங்க வைக்க சோவியத் தனது செல்வாக்கைப் பிரயோகிக்க வேண்டும் என சிங்கப்பூர் பிரதமர் லீகுவான்யு கேட்டுள்ளார்.

சிங்கப்பூர் சென்றுள்ள சோவியத் பிரதமரிடமே லீகுவான்யு இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். சோவியத் யூனியனில் அண்மையில் நடைபெற்ற மாற்றங்களை வரவேற்றுப் பேசிய அவர் ஆசிய பசுபிக் பிராந்திய வளர்ச்சியில் சோவியத் யூனியன் தனது பங்களிப்பைச் செலுத்தும் எனத்தான் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஆசிய பசுபிக் பிராந்திய அமைதி தொடர்ந்து பேணப்பட அமெரிக்கப்படைகள் அங்கு தொடர்ந்து நிலை கொண்டிருப்பது அவசியம் எனவும் லீ குவான்யு குறிப்பிட்டார்.

சோவித் பிரதமர் பேசுகையில் கம்பூச்சியப் பிரச்சினையில் யதார்த்த நிலையறிந்து கொண்டு அதனைத் தீர்த்து வைக்க சோவியத் தயாராக உள்ளதுஎனவும்தெரிவித்தார்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உறுதிப்பாட்டை ஏற்படுத்தசோவியத் ஆதரவாக உள்ளதென்றும், அந்நாடுகளுடன் பொருளாதார உறவை சோவியத்மேம்படுத்தி வருகிறதென்றும் அவர் குறிப்பிட்டார்.

## இன்று நாள் எப்படி

மேடம்: உடல் ஒட்டியரோகம், வாகனநஷ்டம், தேடியவர் வருகை, சகோதரவழி நன்மை, வணிகர்கள்கடற்தொழில் மூலம் இலாபம்.

இடபம்: உயர்பதவி, விவாக நிச்சயம், பணவரவு, வாக்குப்பலிதம், வாகனசுகம், லெட்சுமிகடாச்சம்.

மிதுனம்: பணவரவு, வாகன நஷ்டம், பெரியோராசி, தேடியவர் வருகை, இளைய சகோதரவழியுதவி.

கடகம்: புத்திரவழியுதவி, இலட்சுமிகடாச்சம், வாகன சுகம், உயர்பதவி, தேடியவர் வருகை.

சிங்கம்: மாதாவழியுதவி, சுக ஜீவனம், பொருட்பேறு, மூத்த சகோதர வழியுதவி, விவாக நிச்சயம்.

கன்னி: மாங்கல்யநிவர்த்தி, வாகனமாற்றம், உயர்பதவி, எண்ணியது நடக்கும், கல்வியால் தொழில்.

துலாம்: பிரிந்தகாதலர் ஒன்று சேருவர், வாகனமாற்றம், தூரதேசம் போனவர்கள் வருகை, தடைப்பட்டபணம் கிடைக்கும்.

விருச்சிகம்: வாக்கு வசீகரம், பெண்களாலுதவி, தூரத்துச் செய்தியால் நன்மை, மாமன் வழியுதவி, புதுத்தொழில்.

தனுசு: வாக்குப்பலிதம்; வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம், இளைய சகோதர வழியுதவி.

மகரம்: உயர்பதவி, வாகன சுகம், பணவரவு, இளைய சகோதர வழியுதவி, புகழ் தேடிவரும், புதுத்தொழில்.

கும்பம்: பெரியோராசி, புண்ணிய வழிபாடு, வாகன இலாபம், உயர்பதவி, தேடியவர் வருகை, புதுத்தொழில்.

மீனம்; வாக்குப்பலிதம், எண்ணிய எண்ணம் நிவர்த்தி, வாகனசுகம், இடப்பெயர்வு, இலட்சுமி கடாச்சம், தேக சுகம்.

★ யாழ். சோதிடர்
ச. அரியநாயகம்

இந்தியா அறிவிப்பு

## எல்லைமீறல் மேலும் நடந்தது: துப்பாக்கிப்பிரயோகம் தொடரும்

(புதுடில்லி)

கடந்த ஞாயிறு காஷ்மீருக்குள் வரமுற்பட்ட பாகிஸ்தானியர் மீது இந்தியப் பாதுகாப்புப் படை துப்பாக்கிப் பிரயோகம் செய்த சம்பவம் சரியானதே என்று இந்தியா அறிவித்துள்ளது. இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் தூதுவரை அழைத்து நேரடியாகவே இது தெரிவிக்கப்பட்டது. பாதுகாப்பு எல்லையை மீறும் சம்பவங்கள் மேலும் நடைபெறுமாயின் மேற்படி நடவடிக்கை தொடரும் எனவும் இந்தியா எச்சரித்துள்ளது.

இதேவேளை ஸ்ரீ நகரிலுள்ள தூரதர்ஷன் தொலைக்காட்சிக் கேந்திர நிலைய பணிப்பாளர் திரு. லாஸாகவுல் நேற்றுமுன்தினம் பயங்கரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். ஸ்ரீநகர் ஆகாஷவாணி இயக்குநராகவும் பணிபுரிந்த இவர் காஷ்மீரில் கலவரங்கள் நடைபெற்ற பல பகுதிகளிலும் சேவைபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.


### உடனடி வேலை வாய்ப்புக்கள்

★ ஓமான் — டீசல் மெக்கானிக்
★ சவூதி — வெல்டேர்ஸ்
காப்பென்ரேர்ஸ்
கிளீனேர்ஸ்

16 வயதுக்குட்பட்டவர்கள் ஜேர்மனி உடனடி பயணத்திற்கு தொடர்பு கொள்ளவும்

HELAN TRAVELS
37/7, STANLEY ROAD, JAFFNA.
02133



### கனடாவில்
### வேலைவாய்ப்புக்கள்

| | VACANCIES | | SALARY | |
|---|---|---|---|---|
| 1. | கணக்காளர்கள் | Accountants | 1170 | CD |
| 2. | கணக்குப்பதிவாளர்கள் | Book-Keepers | 900 | CD |
| 3. | இரசாயனவியலாளர்கள் | Chemists | 960 | CD |
| 4. | எழுதுவினைஞர்கள் | Clerks | 840 | CD |
| 5. | சாரதிகள் | Drivers | 850 | CD |
| 6. | பொறியியலாளர்கள் | Engineers | 1340 | CD |
| 7. | எலெக்ரீஷியன்கள் | Electricians | 1110 | CD |
| 8. | போர்மன்கள் | Foremen | 1020 | CD |
| 9. | தொழிலாளர்கள் | Labourers | 750 | CD |
| 10. | மெக்கானிக்குகள் | Machinists | 800 | CD |

நேர்முகப் பரீட்சையின் பின் 3 வருட விசாவுடன் கூடிய தொழில் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். முற்பணம் அறவிடப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்களுக்கும் ஏனைய விபரங்களுக்கும் நேரில் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 28 . 2 . 1990

AXONT AGENCY
370, Point Pedro Road
Anaipanthi
Jaffna.
[வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு அருகாமையில்]

02189

# கொழும்பில் கைதான தமிழ் இளைஞர் தொடர்ந்து காவலில்

கொழும்பில் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் இளவாலை, வயாவிளான், கரவெட்டி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, இமையாணன், மன்னார்' கிளிநொச்சி, சாவகச்சேரி, கோப்பாய், பளை ஆகிய பகுதியைச் சேர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட முந்நூறுக்கும் மேற்பட்ட இளைஞர்களும் தற்போது மஹர, வெலிக்கடை சிறைச்சாலை, கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த செவ்வாயன்று இரவு கொழும்பிலுள்ள லொட்சுகள், ஆலயங்கள், பஸ்நிலையங்கள், விடுதிகள் ஆகியவற்றைச் சுற்றி வளைத்து இலங்கைப் படையினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர், இந்த இளைஞர்களை விசாரிக்க போதியளவு அதிகாரிகள் இல்லை என்றும் இதனால் இவர்களை விசாரித்து விடுதலை செய்ய ஏறத்தாழ மூன்று வாரத்திற்கு மேல் செல்லலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் கொழும்பில் தங்கி இருந்ததற்கான காரணங்கள். ஏன் கொழும்பிற்கு வந்தார்கள்? யாருடன் தங்கியிருந்தார்கள் என்பது பற்றி சரியான தஸ்தாவேஜுக்களை சமர்ப்பித்தால் மட்டுமே விசாரணையின் பின்னர் விடுவிக்கப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது, கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டது சம்பந்தமான செய்திகள் வெளியானவுடன் அவர்களை விடுவிக்க பெற்றோர், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி படைஎடுத்த வண்ணம் உள்ளனர். அதேவேளை கொழும்பில் தொடர்ந்தும் தேடுதல் நடைபெறுவதாகவும், இளைஞர்கள் கைதுசெய்யப்படுவதாகவும் பிந்திக்கிடைத்த செய்தியொன்று தெரிவிக்கிறது.

## யாழ். பல்கலைக்கழக மண்டபம் கட்டிட வேலைகள் ஸ்தம்பிதம்

யாழ். பல்கலைக்கழகத்தின் பரீட்சை மண்டபத்தின் இரண்டாம் மாடிக் கட்டிடவேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. கடந்த மூன்றுமாதகாலமாக இக் கட்டிட வேலைகள் எதுவும் இடம்பெறாமல் உள்ளது.

கட்டிட திணைக்களத்திற்கும் ஒப்பந்தகாரர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள இழுபறி நிலையினாலே மேற்படி கட்டிட வேலை ஸ்தம்பிதமடைந்துள்ளதாக தெரியவருகின்றது

## எஞ்சிய காணி உறுதிகளும் பாதுகாக்க முடியாத நிலை

இட நெருக்கடிகள் காரணமாக யாழ். மாவட்ட காணிப் பதிவகம் பல சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றது. இதனால் பல உறுதிகளை மேலும் பாதுகாக்கமுடியாமல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இப் பதிவகம் யாழ். நீதிமன்ற கட்டிடம், டழைய பூங்கா கட்டிடம் போன்ற இடங்களில் இருந்து தற்போது றக்கா வீதியில் இயங்கி வருகின்றது. கிளிநொச்சி மாவட்டத்திற்குரிய உறுதிகள் அங்கு அனுப்பிவைக்கப்பட்ட பின்னரும் இட நெருக்கடி நிலவிவருகின்றது.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு ரிக்கற் பெற அரசு கடனுதவி

வெளிநாடுகளில் வேலைபெற்றுச்செல்பவர்கள் தமது பயணரிக்கற்றுகளைப்பெற்றுக்கொள்ள கடனுதவி திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட முகவர் நிலையங்கள் மூலம் வேலைபெற்றவர்களுக்கே இத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

முகவர் நிலையம் வேலை பெற்றுக்கொடுப்பதற்கான கடிதத்துடன் இரண்டாயிரத்தி எழுநூறு ரூபாவை வங்கியில் வைப்புச்செய்தால் இந்த கடனை பெற்றுக்கொள்ளலாம்.

## ஜனசக்தி திட்டத்தின் கீழ் 30000 இளைஞருக்கு பயிற்சி

ஜனசக்தி உதவி பெறும் இளைஞர்கள் பல்வேறு தொழில்களை ஆரம்பிக்க தேசிய பயிலுநர் சபை பயிற்சிகளை அளிக்கவுள்ளது இதன் கீழ் மூப்பதாயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் பயிற்சிகளைப் பெறுவார்கள்.

இந்தப் பயிற்சி நெறிக்காக ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்தும் குறைந்தது நூறுபேர் தெரிவுசெய்யப் படுவார்கள் பயிற்சிக் காலத்தில் மாதாந்தப்படி வழங்கப்படும். போக்குவரத்துச் சபை இந்தப் பயிலுநர்கட்கு இலவச சீசன் சீட்டுக்களை வழங்கவுள்ளது.

### சாவதேச...

ரோனிக செயற்கைக்கால் பொருத்துவதற்காக அனுமதிக்கப்பட்டுவ்ளமை தெரிந்ததே.

### புலிகள்...

சாதாரணமுறையில் பேசவிருப்பதாகவும் முதல்வர் கூறினார். ஏனைய தமிழ்க் குழுக்களுடன் நாளை பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படலாம் என முதலமைச்சர் தெரிவித்தார்.

## காலமானர்

### தாமு சரவணமுத்து

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த தாமு-சரவணமுத்து 17—02—1990 சனிக்கிழமை காலமானர். அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும் செல்லத்துரை (மக்கள் வங்கி வவுனியா) கதிர்காமத்தம்பி பளை. மதுபான சாலை உரிமையாளர்), சற்குணசிங்கம், (Holland)பாலசுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரவதனு, இந்திராணி (அன்ரே மதுபான சாலை உரிமையாளர் குஞ்சு, ஆறுமுகம் (K K.S. Cement Corp), ஆகியோரின் அன்பு மாமனாரும், தயாளன்' தயாநிதி, தர்சன், தயாரூபன் நிசாளினி, லோகேஸ்வரன்; சஜீவன், றஜீவன். அபர்ணு, இனியா, தனஞ்சேனன் ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ் சென்ற வைரமுத்து, தம்பையா, பொன்னமபலம் ஆகியோரின் சகோதரரும், காலம் சென்ற இராசாவின் மைத்துனரும் ஆவார் இவரது இறுதிக் கிரியைகள் 18-02-90 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும்

தகவல்
S. வேல்முருகன்
கோண்டாவில்.

02201

# வைத்தியசாலை சீர்கேடு அனுமதிக்க முடியாது - தீபன்

(பருத்தித்துறை)

வைத்தியசாலைகளின் சேவைகள் மனித சமுதாயத்தின் மிக அத்தியாவசிய சேவைகளாகும் வைத்தியசாலைகளில் நிர்வாகச் சீர்கேடுகள் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது. வைத்தியசாலை ஊழியர்கள் தமது கடமையின் முக்கியத்துவத்தினை கருத்திற்கொண்டு சிறப்பாகச் செயற்பட வேண்டும். மக்களுக்குவைத்திய சேவைகளை வழங்குவதற்கு இடையூறாக இருப்பவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. தீபன் பருத்தித்துறை அரசினர் வவத்திய சாலை அபிவிருத்திச்சபை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். வைத்தியசாலை மண்டபத்தில் டாக்டர். எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் இக் கூட்டம் நேற்று நடைபெறறது.

திரு. தீபன் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் பல்வேறு வகையான நிர்வாகச்சீர்கேடுகள் இடம் பெறுவதாகப் பலத்த புகார்கள் கிடைத்துள்ளன- ஊழியர்கள் ஏனோதானோ என்ற மனப்போக்குடன் தாங்கள் நினைத்தபடி செயற்படுகின்றனர்.

வைத்தியசாலையின் சுகாதாரச் சீர்கேடு மிக உச்சமாக இருக்கின்றது, இது நோயாளர்களுக்குப் பயங்கர கெடுதிகளை ஏற்படுத்தும்.

வைத்தியசாலை நிர்வாகம் இவற்றினைக்கருத்திற்கொண்டு இக் குறைபாடுகள், சீர்கேடுகளை உடனடியாக நீக்கக்கூடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

### மேஜர் சோதியா...

இயக்கத்தைச் சேர்ந்த பல விடுதலை வீரர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். முன்னாள் யாழ். தளபதி திரு. கிட்டு லண்டனில் இருந்து அனுப்பிய செய்தியும் வாசிக்கப்பட்டது.

### மட்டு..

திப்பு ஒன்றையடுத்தே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுமக்கள், வாகன சாரதிகள், வாகன உரிமையாளர்கள் வீதி ஒழுங்குகளை சீர் செய்ய ஒத்துழைப்பு வழங்குமாறு மட்டு மாவட்ட புலிகளின் அரசியல் பொறுப்பாளர் எஸ். கரிகாலன் அறிக்கை மூலம் கேட்டுள்ளார்.

### மாத்தயா...

உரையாடுவார்.

கிழக்கில் தோன்றிய தமிழ்-முஸ்லிம் பிரச்சினையை தீர்வுக்கு கொண்டு வருவதற்காகவும் அமைதி நிலையை ஏற்படுத்துவதற்காகவும் அவர் தமிழ் - முஸ்லிம் பிரமுகர்களுடனும் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளார்.

### வட. கிழக்கு...

காரிகள் தட்டுப்பாடு நிலவி வருகின்றது இதை நிவர்த்தி செய்வதற்காகவே மேற்படி ஆட்சேர்ப்பு விரைவாக நடைபெறுவதாக பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### புலிகளிடம...

யில் இவர்களை மன்னித்து விடுவிக்கின்றோம். இவர்கள் நல்வழியில் வாழவேண்டும். அதனை கண்காணிக்கின்ற பொறுப்பு பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றது என்றார். அடம்பன் பிரதேசப் பொறுப்பாளர் பி. பாரதியும் இந்த வைபவத்தில் உரையாற்றினர்.

## மாகாணசபை தற்காலிக ஊழியர் நிரந்தரமாக்கப்படுவர்

வடக்கு, கிழக்கு மாகாணசபையில் தற்போது பணிபுரியும் 1465 தற்காலிக ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படவுள்ளார்கள். இதற்கான அங்கிகாரத்தை வடகிழக்கு மாகாணசபை வழங்கியுள்ளது.

இதன் மூலம் 362 லிகிதர்கள், 140 தட்டெழுத்தாளர்கள், 12 சுருக்கெழுத்தாளர்கள், 149 சாரதிகள், 52 அலுவலக ஊழியர்கள், 251தொழிலாளர்கள், 4 களஞ்சிய காப்பாளர்கள் மற்றும் 490 ஏனைய ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.

### 87 இளைஞர்கள்...

ஏற்கனவே இந்திய படை முகாமிலும், உடுப்பிட்டி முகாமிலும் வைத்து பிரஜைகள் குழுவினர் முன்னிலையில் இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இன்று ஞாயிற்றுக்கிழமையும் தடுத்துவைக்கப்பட்ட ஒரு தொகுதி இளைஞர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது

### அதிக...

நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னரும் இவ்வாறு அதிக பயணிகளை ஏற்றிவந்த மூன்று மினிபஸ்கள் பருத்தித்துறை வீதியில் விடுதலை புலிகளால் தடுத்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


## தேவை

**அச்சுக்கோப்பாளர்கள்**

அனுபவமுள்ள அச்சுக்கோப்பாளர்கள் உடன் தேவை அனுபவத்திற்கும் திறமைக்கும் ஏற்ற சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும்.

**பயிலுநர்கள்**

அச்சுக்கோப்பாளர்களாகப் பயில விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

பொதுமுகாமையாளர்
முரசொலி பப்ளிஷர்ஸ் பிரைவேட் லிமிற்றெட்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

நகை வேலைசெய்ய பயன்படுத்தும் வெள்ளை இரும்பிலான சட்டம் கே. கே. எஸ். வீதியில் சிவன்கோவிலுக்கும் தட்டாதெரு சந்திக்குமிடையில் தொலைந்துவிட்டது. எடுத்தவர்கள் கீழ் உள்ள விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

ஆ. கந்தசாமி (கண்ணன்)
68 E, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

02202


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஏ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 18-02-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது